# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2013.12.31

**தாபனச் சுற்றறிக்கை இலக்கம் : 19/2013**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**35/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையை ஏற்புடைத்தாக்குதல்.**

"எதிர்கால சந்ததிக்காக தேசிய ஒற்றுமையை உறுதி செய்து சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் நிமித்தம் ஒன்றிணைந்து பணியாற்ற உறுதிபூணுவோம்" எனும் தலைப்பிலான 2013.12.23 ஆம் திகதிய 35/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்தினை 2014.01.01 ஆம் திகதி உங்களது அலுவலக வளாகத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தயவாய் வேண்டிக்கொள்கின்றேன்.

மேலதிக விபரத்திற்காக 35/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ஒப்பம்: பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம**

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர் கல்வி அமைச்சு
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
6. பீடாதிபதிகள்
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars)
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள் / உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள் / உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் / வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR10/1/1

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 35/2013

எனது இல: EST-1/MISCL/06/0032(1)
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திரச் சதுக்கம்
கொழும்பு 07

2013.12.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
அரசாங்கக் கூட்டுத் தாபனங்கள்/ நியதிச்சட்டச் சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**எதிர்கால சந்ததிக்காக தேசிய ஒற்றுமையினை ஒன்றுதிரட்டும் அதேவேளை சமுதாய மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக ஒன்றுசேர்ந்து பணியாற்ற உறுதிபூணுவோம்**

"பொதுமக்களிற்கான சேவைகளைச் சிறந்த முறையில் வழங்குவதன் மூலம் மக்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவோம்" என்பது குறித்த 2012.12.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 19/2012 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் மீது தங்களின் தயவான கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

02. எதிர்கால சந்ததிக்காக தேசிய ஒற்றுமையினை ஒன்றுதிரட்டும் அதேவேளை சமுதாய மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக ஒன்றுசேர்ந்து பணியாற்றுவதற்கு உறுதிபூணுவதற்காக சகல அரச சேவையாளர்களினதும் மனநிலை மாற்றம் ஒன்றினை மனதில் பதியவைப்பதற்கான அவசியத்தினை வலியுறுத்தி சகல அரசாங்க சேவையாளர்களினதும் பங்குபற்றலுடன் 2014 ஆம் ஆண்டின் முதலாவது வேலை நாளாக உள்ள 2014 சனவரி 01 ஆம் திகதியான, புதன் கிழமையன்று பொருட்டு விசேட நிகழ்ச்சித் திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

03. இந்தப் பிரதான உத்தியோகபூர்வ வைபவமானது மேன்மை தங்கிய சனாதிபதி அவர்களின் செயலாளரின் ஆதரவின் கீழ் சனாதிபதி செயலக வளாகத்தில் அத்தியம் மு.ப. 9.00 மணியளவில் நடாத்தப்படும். இந்தப் பிரதான வைபவத்திற்கு ஒருங்கிணைவாக தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தினைப் பிரதிபலிக்கின்ற சகல அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களிலும் இந் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய, இது குறித்து கீழே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமானது அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும்.

I. சகல பணித் தொகுதியினர் முன்னிலையில் நிறுவனத்தின் அல்லது அலுவலகத்தின் தலைவரினால் தேசியக் கொடியினை ஏற்றுதல் (பணித் தொகுதியினரின் சகல உறுப்பினர்களும் ஓர் இடத்தில் ஒன்றுகூடுவதற்கு இடவசதிகள் போதாதவிடத்து அனைத்து உறுப்பினர்களும் பங்குபற்ற முடியுமாயிருக்கின்றவாறு பொருத்தமான மாற்று ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்).

II. தேசியக் கொடியினை ஏற்றியதன் பின்பு தேசிய கீதத்தினைப் பாடுதல்.

III. படை வீரர்கள் உள்ளிட்ட நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த சகலரையும் நினைவுகூர்வதற்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்துதல்.

IV. சகல பணித்தொகுதியினரும் தமக்கு இலகுவான மொழியில் இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அரசாங்கச் சேவகர்களின் சத்தியம்/உறுதி மொழியினை உரத்து வாசித்தல்.

V. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி அம்சமாக, எதிர்கால சந்ததிக்காக தேசிய ஒற்றுமையினை ஒன்றுதிரட்டும் அதேவேளை சமுதாய மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக ஒன்றுசேர்ந்து பணியாற்றும் பொருட்டு சகல அரசாங்கப் பணியாளர்களினதும் உடனடியான, நேர்மையான மற்றும் உறுதியான பங்களிப்பினை உறுதிப்படுத்துவதற்கான அவசியம் தொடர்பில் உரிய நிறுவனத் தலைவர் சுருக்கமான உரையொன்றினை வழங்குதல்.

04. இந்த நிகழ்ச்சித் திட்டத்தினை வெற்றிகரமானதொன்றாக உருவாக்குவதற்கு முன்னுரிமை வழங்கி அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தயவுடன் தாங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

ஒப்பம்/ பீ. வீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

பிரதிகள்: கௌரவ மாகாண ஆளுநர்கள்

# <u>அரசாங்க சேவையின் சத்தியம்/உறுதி மொழி</u>

இரண்டாயிரத்து பதினான்காம் ஆண்டு, சனவரி மாதம், முதலாம் திகதியாகிய இன்றைய தினம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசானது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பினை உண்மையாக்கும் புதியதோர் ஆண்டின் ஆரம்பத்தினை அடையாளப்படுத்துகின்றது.

இன்று ஆரம்பமாகும் புத்தாண்டினுள் எதிர்கால சந்ததிக்காக தேசிய ஒற்றுமையினை உறுதிப்படுத்தி சமுதாய மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்தும் பொருட்டு ஒற்றுமையுடனும் சமாதானத்துடனும் ஒரே கொடியின் கீழ் ஒரே நாடாக, ஒரே தேசமாக மலர்ச்சியடைகின்ற தாய் நாட்டை அபிவிருத்தி செய்யும் சவாலிற்கு முகங்கொடுக்கும் நோக்குடன்

வினைத்திறமையாகவும்,
பயன் மிக்கதாகவும்,
உச்ச அளவிலான அர்ப்பணிப்புடனும்,

நேர்மையோடும்,

திடசங்கற்பத்துடனும்,

மக்களுக்குச் சார்பாகவும்,

அரச கொள்கைகள் மற்றும் நோக்கம் என்பவற்றை

நடைமுறைப்படுத்தும் பொருட்டு என்னிடம் அளிக்கப்படுகின்ற

கடமைப் பொறுப்புக்களை சகல வழிகளிலும் நிறைவேற்றுவேன்

என்று பொதுமக்களின் பணத்தில் சம்பளம் பெறும் அரசாங்க

ஊழியரான நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்/சத்தியம்

செய்கின்றேன்.